2002 ஏப்ரல் 23]

முற்பகல் 11-15

213—

மீன்பிடித் தளம்

***6703—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகின்றன. அது தொடங்கப்பட்டபோது, வெறும் 100 விசைப் படகுகள் மட்டுமே இயக்கப்பட்டன. தற்போது ஆயிரத்திற்கும் அதிகமான விசைப் படகுகள் இயக்கப்பட்டு, அதனால் 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. விரிவுபடுத்தும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்குவதற்கு நன்றி. அப்பணி எப்போது தொடங்கப்படும்? அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் துறைமுக விரிவாக்கம் இரண்டாம் கட்டப் பணியாக மேற்கொள்ளப்படவுள்ளது. பெங்களூர் மத்தியக் கடலோர மீன்வளப் பொறியியல் மையத்தால் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்

தொலைநோக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு, மீன்பிடித் துறைமுகத் திட்ட, வட்டக் கண்காணிப்புப் பொறியாளரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. வருகிற 24 ஆம் தேதி பெங்களூர் மத்தியக் கடலோர மீன்வளப் பொறியியல் மைய இயக்குநர் திரு. கே. ஓம்பிரகாஷ் அவர்கள் சென்னை வரவுள்ளார். அவர் 25 அல்லது 26 தேதிகளில் இத்திட்ட இடத்தைப் பார்வையிட உள்ளார். பார்வையிட்ட பின்புதான் மதிப்பீடு தயாரிப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்படும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு, ரூபாய் 8 கோடியிலிருந்து 10 கோடி ஆகும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 214, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

214—

சுற்றுலா மையங்கள்

***6003—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் காசி விசுவநாதர் கோயில், கொழுமம் தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் சிவன் கோயில், காரத்தொழுவு சிவன் கோயில் ஆகியவற்றைச் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் காசி விசுவநாதர் கோயில், கொழுமம் தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் சிவன் கோயில், காரத்தொழுவு சிவன் கோயில் ஆகியவற்றைச் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.